RBI.2009-2010/90

DCM(NE) No.G-3/08.07.18/2009-10 01 ஜூலை 2009

அனைத்து பொதுத்துறை மற்றும் தனியார் வங்கிகள்
அயல்நாட்டு வங்கிகள், மாநிலக கூட்டுறவு வங்கிகளின்
தலைவர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள்

அன்புடையீர்,

**மூலச்சுற்றறிக்கை – நோட்டுகள் மற்றும் நாணயங்கள் மாற்றும் வசதி**

நோட்டுகள் மற்றும் நாணயங்கள் மாற்றும் வசதி குறித்த நமது மூலச்சுற்றறிக்கை வெளியிடப்பட்ட கடிதம் எண் DCM(NE). G.2/08.07.18/2002-03 ஜூலை 5, 2002ம் தேதியிடப்பட்டதை கவனிக்க. இந்த விஷயத்தில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, உங்களின் தகவலுக்காகவும், தேவைப்படுகையில் தகுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் திருத்தப்பட்ட மூலச்சுற்றறிக்கையை உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். எங்களது இணைய தளமான www.rbi.org.in. ல் இச்சுற்றறிக்கையை காணமுடியும்.

தங்கள் உண்மையுள்ள

(B.K.மிஸ்ரா)
உதவி பொது மேலாளர்

## இந்திய ரிசர்வ் வங்கி (நோட்டு மாற்றும்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது அதிகார ஒப்படைப்பு

1.(a). வங்கி நோட்டு அல்லது அரசாங்க நோட்டில் தொலைந்தவை, கிழிந்தவை, திருடுபோனவை, முழுமையல்லாதவைகளுக்கு ஈடான தொகையை அரசாங்கத்திடமிருந்தோ ரிசர்வ் வங்கியிடமிருந்தோ பெறுவதை உரிமையாக எவரும் கருத முடியாதென இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934ன் சட்டப்பிரிவு எண் 28ஐ சட்டப்பிரிவு எண் 58(2)டுடன் சில உண்மையான நிகழ்வுகளில் பொதுமக்களுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தவிர்க்கும் பொருட்டு மத்திய அரசின் முன் அனுமதியோடு, குறிப்பிடப்பட்ட சில சூழ்நிலைகளில், சில விதிகளுக்கும் எல்லைகளுக்கும் உட்பட்டு, அந்த அரசாங்க ரூபாய் நோட்டுகள் மற்றும் வங்கி நோட்டுகளுக்கு ஈடான தொகையை ரிசர்வ் வங்கி கருணை அடிப்படையில் வழங்கும்.

(b). கிழிந்த, பழுதடைந்த குறைபாடுள்ள ரூபாய் நோட்டுகளை மாற்றும் பொருட்டு இந்திய ரிசர்வ் வங்கியின் "நோட்டு மாற்றும்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது" விதிகளின்படி பொதுமக்களின் நலனுக்காகவும் சௌகரியத்திற்காகவும் பணக்கருவூலங்களைக் கொண்டிருக்கும் அனைத்து வங்கிக்கிளைகளுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

<u>**பழுதடைந்த நோட்டுகள்**</u>

2. விரைவாக நோட்டுகளை மாற்றும் வசதிக்காக பணக்கருவூலமில்லாத வங்கிக்கிளைகள் உட்பட எல்லா வங்கிக்கிளைகளிலும் கீழ்க்குறிப்பிடப்பட்ட பழைய மற்றும் கிழிந்த நோட்டுகளை மாற்றும் வசதி எளிதாக்கப் பட்டுள்ளது. வங்கிகளிடம் வைத்திருக்கும் கணக்கில் செலுத்தவோ, அரசாங்கக் கணக்குகளில் செலுத்துவதற்கோ இந்த வகையான நோட்டுகள் வங்கி முகப்புகளில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

I. <u>ஒரே இடத்தில் எண்களுடைய நோட்டுகள். ரூ.1, ரூ.2 மற்றும் ரூ.5</u>

கொடுக்கப்படும் நோட்டு 2 துண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடாது. நோட்டின் முக்கிய அம்சங்கள் அனைத்தும் இருக்க வேண்டும். பிரிவுபடாத ஒரு துண்டில் நோட்டின் எண்கள் முழுவதுமாக இருக்க வேண்டும்.

II. <u>இரு இடங்களில் எண்களுடைய நோட்டுகள். ரூ.10, ரூ.20,ரூ.50 ரூ100, ரூ.500, ரூ.1000</u>

கொடுக்கப்படும் நோட்டு 2 துண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது. நோட்டின் முக்கிய அம்சங்கள் அனைத்தும் இருக்க வேண்டும். கொடுக்கப்பட்ட 2 துண்டுகளும் ஒரே நோட்டை சார்ந்தவையாக இருக்க வேண்டும். நோட்டின்

முழு வரிசை எண்கள் முழுவதும் இரண்டு துண்டிலும் ஒன்றாக சரியாக ஒத்து இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட நோட்டுகள் பழுதடைந்த நோட்டுகளாகக் கருதப்படும். எந்தவொரு சமயத்திலும் இத்தகுதியற்ற நோட்டுகள் மீண்டும் புழக்கத்திற்கு பொதுமக்களுக்கு வழங்கக்கூடாது. ஆனால் அவை ரிசர்வ் வங்கிக்கு பணக்கருவூல அனுப்பீடுகளாக பணக்கருவூலங்களுடைய வங்கிக் கிளைகளால் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**சிதைந்த நோட்டுகள் - சமர்ப்பித்தல் மற்றும் மதிப்பாணை அளித்தல்**

3. ஒரு கரன்சி நோட்டின் ஒரு பகுதி காணாமல் போயிருந்தாலோ அது ஒரு சிதைந்த நோட்டு எனப்படும். ரிசர்வ் வங்கியின் வழங்கல் அலுவலகங்களிலோ அல்லது வணிக வங்கிகளில் அதற்கென நியமிக்கப்பட்ட வங்கிக்கிளைகளிலோ சிதைந்த நோட்டுகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்திய ரிசர்வ் வங்கியின் (நோட்டு மாற்றும்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது) அடிப்படையில் உருவாக்கப்பட்ட விதிகளுக்கொப்ப, சமர்ப்பிக்கப்பட்ட சிதைந்த நோட்டுகளுக்கு மதிப்பாணை வழங்கப்படும். மேற்கண்ட விதிகள் பற்றிய விவரங்கள் ரிசர்வ் வங்கியின் இணையதளமான (http://www.rbi.org.in).

**எரிந்த, கருகிய, பிரிக்கமுடியாதபடி ஒட்டிக்கொண்ட, எளிதில் நொருங்கும் தன்மையாக மாறிவிட்ட நல்ல நோட்டுகள்**

4. மிக மோசமாக கருகிப்போன, புகைமண்டிய பிரித்து உபயோகிக்க முடியாத சாதாரணமாகக் கையாள முடியாத நோட்டுகள் வங்கிக்கிளைகளில் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அந்த நோட்டுகளின் உரிமையாளர்கள் அவைகளை ரிசர்வ் வங்கியின் பண வழங்கு துறைக்குச் சென்று ஒப்படைக்கும்படி அறிவுறுத்தலாம். அங்கே அத்தகைய நோட்டுகள் சிறப்பு முறைப்படி பரிசீலிக்கப்பட்டு மாற்று மதிப்பு வழங்கப்படும்.

**Pay/Paid/Reject முத்திரைகள் குத்தப்பட்ட நோட்டுகள்**

5. “நோட்டு மாற்றும்” விதிகள் 1975ல் (1980 வரை திருத்தப்பட்டது) சொல்லியுள்ளபடி, ஒவ்வொரு வங்கிக்கிளையிலும் ஏற்றுக்கொள்ளப்படும் நோட்டுகள் குறித்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் படைத்தவராக வங்கிக் கிளையின் பொறுப்பு அதிகாரியும், வங்கிக்கிளை மேலாளர், கணக்கர் அல்லது பணத்துறையிலுள்ள அதிகாரி ஒருவரை நியமிக்கப்பட்ட அதிகாரியாகக்கொள்ளலாம். அந்த நோட்டுகள் குறித்த தீர்ப்பினை முடிவு செய்த பின், நியமிக்கப்பட்ட அதிகாரி தனது ஆணையைப் பதிக்கும் பொருட்டு, தேதியிட்ட Pay/Paid/Reject முத்திரைகளை நோட்டின்மேல் இட்டுத் தனது கையொப்பத்தையிட வேண்டும். Pay மற்றும் Reject முத்திரையிடப்பட்டதில் வங்கியின் பெயர் மற்றும் கிளையும்

குறிக்கப்படவேண்டும். ரிசர்வ் வங்கியின் "நோட்டு திருப்பித்தருதல்" விதியின் 5(1)ன் குறைபாடுள்ள Pay/Paid/Reject முத்திரையிடப்பட்ட ரிசர்வ் வங்கியின் அல்லது வேறெந்த வங்கிக்கிளையின் பெயர் குறிக்கப்பட்ட நோட்டுகள் மீண்டும் ஏதாவதொரு வங்கிக்கிளையில் அளிக்கப்பட்டால் அவருக்கு நோட்டின் மதிப்பு மறுக்கப்பட வேண்டும். அந்த நோட்டுகளின் மீதுள்ள Pay, Paid முத்திரைகள் சான்றுரைத்தப்படி அத்தகைய நோட்டுகளின் மதிப்பு ஏற்கனவே குறிக்கப்பட்ட வங்கியின் கிளையிலிருந்து பெறப்பட்டுள்ளது. Pay, Paid முத்திரையிடப்பட்ட நோட்டுகளை கவனக்குறைவாகக்கூட புழக்கத்திற்கு பொதுமக்களிடையே வெளியிட வேண்டாமென எல்லா வங்கிக்கிளைகளுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப் பட்டுள்ளன. வங்கிக்கிளைகளும் தமது வாடிக்கையாளர்கள் இத்தகைய முத்திரையிடப்பட்ட நோட்டுகளை எந்த வங்கியிடமிருந்தோ மற்றவரிடமிருந்தோ பெற வேண்டாமென எச்சரிக்க வேண்டும்.

**<u>கோஷங்கள் அரசியல் கொள்கைகள் எழுதப்பட்ட நோட்டுகள்</u>**

6. ரிசர்வ் வங்கியின் நோட்டு மாற்றும் விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது) விதி எண் 5(2) ன்படி அரசியல் சார்ந்த கோஷங்கள் கொள்கைகள் எழுதப்பட்ட நோட்டுகள் சட்டப்படி பணமென கருதப்பட மாட்டாது. அவைகளின் மதிப்பு திருப்பித் தரப்பட மாட்டாது. உருமாற்றியமைக்கப்பட்ட நோட்டுகளும் "நோட்டு திருப்பித் தருதல்" விதிகள் விதி எண் 5(2)ன் கீழ் மறுக்கப்பட்டு விடும்.

**<u>வேண்டுமென்றே கிழிக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட நோட்டுகள்</u>**

7. (நோட்டு மாற்றும்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது) விதி எண் 5(2)(ii)ன்படி வேண்டுமென்றே கிழிக்கப்பட்ட அல்லது மாற்றம் செய்யப்பட்ட நோட்டுகள் மாற்றுவதற்காகத் தரப்பட்டால் அவைகள் மறுக்கப்பட வேண்டும். இவ்வாறு நோட்டுகள் கிழிக்கப் பட்டனவா, சிதைக்கப்பட்டனவா என்பதைக் கண்டுபிடிப்பது கடினமென்றாலும், நோட்டுகள் ஒரே மாதிரியான குறைபாடுகள் அல்லது நோட்டுகளில் காணாமல் போன பகுதிகளும் ஒரே மாதிரியான அமைப்பில் அதிக அளவில் அளிக்கப்பட்டால் அவற்றை கவனித்துப்பார்க்கையில் மோசடிக்கான நோக்கம் தெரியவரும். இந்த மாதிரியான தருணங்களில் அத்தகைய நோட்டுகளை அளித்தவர், தரப்பட்ட நோட்டுகளின் வரிசை எண்கள் ஆகிய தகவல்களை எந்த ரிசர்வ் வங்கிக்கிளையின் பணம வழங்குத்துறையின் ஆட்சி எல்லைக்குள் அக்கிளை இருக்கிறதோ அந்த ரிசர்வ் வங்கியின் பொதுமேலாளர் அல்லது இணைமேலாளருக்கு அறிவிக்க வேண்டும். மிகப்பெரும் அளவில் இத்தகைய நோட்டுகள் அளிக்கப்பட்டால் அந்த பகுதியைச் சார்ந்த காவல் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட வேண்டும். குறைபாடுடைய கிழிந்த நோட்டுகளை மாற்றும் வசதியை தனிப்பட்ட பணமாற்றாளர் அல்லது தரகர்கள் ஆக்கிரமிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**<u>பயிற்சி</u>**

8. முக்கியத்துவத்தின் அடிப்படையில், பணக்கருவூலங்களையுடைய வங்கிக்கிளைகளின் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்குப் பயிற்சி முகாம்கள் அமைத்திட பணம வழங்குத்துறைக்கு பரிந்துரைகள் அளிக்கப்பட்டுள்ளன. நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மட்டுமே பயிற்சிமுகாம்களுக்கு அனுப்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதைக் கிளைகள் உறுதி செய்து கொள்ள வேண்டும், குறைபாடுகளைப் பெற்று தீர்ப்பளிப்பதில் திறமையையும் நம்பிக்கையும் வளர்த்துக் கொள்ள வழிசெய்யும் பொருட்டு அவர்களுக்கு அறிவூட்டவும், நியமிக்கப்பட்ட வங்கி அதிகாரிகள் இத்தகு பயிற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியம்.

**<u>அறிவிப்புப் பலகைகளில் அறிவிப்பு</u>**

9. ‘‘சிதைந்த கிழிந்த நோட்டுகள் மாற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்’’ என்ற அறிவிப்பைத் தாங்கிய பலகையை அனைவரும் அறியும்வண்ணம் வங்கிக்கட்டிடத்திலேயே வைத்திடுதல் அவசியம். இவ்வாறு நோட்டுகள் மாற்றும் வசதி எல்லா அதிகாரப்பூர்வமான வங்கிக்கிளைகளிலும் அளிக்கப் படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். நோட்டுகள் மற்றும் நாணயங்கள் மாற்றும் வசதிகளைப் பற்றிய விவரங்களை அதற்கென உள்ள கிளைகளின் பொது தளத்தில் வெளியிடவேண்டும்.

**<u>1000 ரூபாய் நோட்டின் புழக்கம்.</u>**

10. 1000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்திற்கு வந்தபின் (நோட்டு மாற்றும்) விதிகள் 1975 (1980 வரை திருத்தப்பட்டது) விதிகளில் எங்கெல்லாம் 500 ரூபாய் என்கின்ற வார்த்தை வருகிறதோ அந்தந்த இடங்களில் ரூபாய் 1000 என்கின்ற வார்த்தையைப் போட்டு, 1000 ரூபாய் என்பதையும் சேர்க்க வேண்டிய இடங்களில் சேர்த்துப் பொருள் கொள்ளவும். இதன் பலன் என்னவெனில் இதுவரை இருபக்கமும் வரிசை எண்கள் கொண்ட நோட்டுக்களின் வரிசையில் ரூ.500க்கு பிறகு 1000ரூபாய் நோட்டும் சேர்க்கப்பட்டு முன்னவற்றிற்குப் பொருந்தும் விதிகள் இதற்கும் பொருந்துமாறு செய்வதாகும். ஆகவே ரூ.10, ரூ.20,ரூ.50, ரூ.100, ரூ.500, ரூ.1000 நோட்டுகள் எவ்வாறு தீர்ப்பளித்து மாற்றப்படுகின்றனவோ அதே போல் 1000 ரூபாய் நோட்டுகளும் ரிசர்வ் வங்கி நோட்டுகள் திருப்புதல் விதிகளின்படி மாற்றப்படும்.

**<u>பணக்கருவூலங்களில் மாற்றப்படும் நோட்டுகள்</u>**

11. பண வழங்கு துறையின் ஆட்சி எல்லைக்குட்பட்ட பணக் கருவூலங்கள், அவர்களால் முழுமதிப்பு அளிக்கப்பட்ட கிழிந்த சிதைந்த நோட்டுகள், தணிக்கை செய்யப்படும் பொருட்டு, பழைய நோட்டுகளை ரிசர்வ் வங்கியின்

பணம் வழங்கு துறைக்கு அனுப்பப்படும் சமயம் அவற்றோடு சேர்த்து, அதற்கான முறைப்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும். பணக் கருவூலங்கள் கொண்டுள்ள வங்கிகள் பாதி மதிப்பு மட்டுமே அளிக்கப்பட்ட நோட்டுகளை (கிளையின் பண இருப்பில் கணக்கு வைக்கப்பட்டவை) முழுமதிப்பு அளிக்கப்பட்ட நோட்டுகளோடு சேர்த்தோ அல்லது தனியாகவோ காப்பீடு செய்யப்பட்ட பதிவு அஞ்சல் மூலம் அவ்வப்போது ரிசர்வ் வங்கியின் பண வழங்கு துறைக்கு அனுப்பி வைக்கலாம். முழுமதிப்பு அளிக்கப்பட்டவை "பண அனுப்பீடாக" ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்ட Invoiced Notes Accountல் பதிவு செய்யப்படும். ஆனால் பாதிமதிப்பு மட்டுமே தரப்பட்ட பழைய கிழிந்த நோட்டுகள் கேட்புரிமைபிரிவின் வரவாகக் கருதப்பட்டு கணக்கில் வைக்கப்படும். அனைத்து நியமிக்கப்பட்ட வங்கிக்கிளைகளும் எங்களுடைய வழங்கல் அலுவலகங்களுக்கு மதிப்பு குறித்து தீர்ப்பளிக்கப்பட்ட நோட்டுகளின் எண்ணிக்கை பற்றிய மாதாந்திர அறிக்கையை சமர்ப்பிப்பது அவசியமாகிறது.

<u>வங்கிக்கிளைகளில் நோட்டுகள் மாற்றும் வசதி</u>

12(a)பணக் கருவூலங்கள் வைத்திருக்கும் நாட்டிலுள்ள எல்லாப்பகுதிகளிலும் வங்கிகளின் கீழ்க்கண்ட வாடிக்கையாளர் உள்ள அனைத்துக் கிளைகளும்சேவையை சுறுசுறுப்பாகவும் ஆர்வத்தோடும் பொதுமக்களுக்கு செய்யவேண்டியது அவசியம். இந்த நோக்கத்திற்காகவே பொதுமக்கள் ரிசர்வ் வங்கியின் பிராந்திய அலுவலகத்தை நாடுவது இதனால் தவிர்க்கப்பட வேண்டும்.

i. புதிய/நல்ல தரமான ரூபாய்தாள்கள்/நாணயங்கள் எல்லா அளவைகளிலும் பொதுமக்களின் தேவைக்கேற்ப வழங்குதல்

ii. பழைய கிழிந்த நோட்டுகளை மாற்றித்தருதல்

iii. நாணயங்களையும் ரூபாய் தாள்களையும் நடவடிக்கைக்காகவோ, சில்லரை மாற்றத்திற்காகவோ பெற்றுக்கொள்ளுதல்

(b). பணக் கருவூலங்கள் உடைய எல்லா வங்கிக்கிளைகளும் பழைய கிழிந்த/சிதைந்த நோட்டுகளை மாற்றும் வசதியை அளிக்கவேண்டும். அத்தகைய வங்கிக்கிளைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ரிசர்வ் வங்கியிடம் அல்லது அந்தந்த வங்கிகளிடம் கிடைக்கும். பொது மக்களின் பார்வைக்காக இத்தகைய வசதிகள் இருப்பது அந்தந்த வங்கிக்கிளைகளில் அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

©. ஒவ்வொரு வங்கிக்கிளைகள்/வங்கி அலுவலர்கள் அவர்தம் முகப்புகளில் அளிக்கப்படும் சிறிய மதிப்பிலக்க நோட்டுகளையும் நாணயங்களையும் ஏற்றுக்கொள்ள மறுக்கக்கூடாது.

**ரிசர்வ் வங்கிக்கும் மற்றும் வணிக வங்கிகளுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம்**

13.(a). சிறுநாணய சேமிப்புக்கிடங்கு மற்றும் பணக் கருவூலங்கள் அமைந்திடும்பொருட்டு வணிக வங்கிகளுக்கும். ரிசர்வ் வங்கிக்கும் இடையேயான ஒப்பந்தத்தில் வங்கிக்கிளைகள் மாற்றத்திற்காக நாணயங்களை ஏற்றுக்கொள்ளும்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. வங்கிகள் தனது கிளைகளுக்குப் பின்வருமாறு அறிவுறுத்தல்கள் வழங்கிடவேண்டும்.

i. எல்லா அளவைகளிலும் நாணயங்களைப் பொது மக்களிடமிருந்து எந்தவித வரையறைகளுமின்றி பெற்றுக் கொண்டு, அவற்றின் மொத்த மதிப்பினைப் பணமாக அளிக்க வேண்டும்.

ii. பெரிய அளவில் வழங்கப்படும் நாணயங்களை இதுவரை செய்ததுபோல் எடையிட்டோ எண்ணும் எந்திரத்தைப் பயன்படுத்தி எண்ணியோ நாணயங்களை பெற்றுக் கொள்ள வேண்டும்.

iii. பெறப்பட்டவற்றில் ரூபாய் நாணயங்களின் மதிப்பினை பணக் கருவூல நிலுவைத் தொகையாகவும், சிறிய நாணயங்களின் மதிப்பினை சிறு நாணயக்கிடங்கின் நிலுவைத் தொகையாகவும் வைத்திருக்கலாம்.

(b) மாற்றும்பொருட்டோ, சேமிப்புக்கணக்கில் வரவுவைக்கும் பொருட்டோ வாடிக்கையாளர்கள் அளிக்கும் எல்லா அளவைகளிலும் உள்ள நாணயங்கள் மற்றும் ரூபாய்த் தாள்களைப் பெற்றுக் கொள்ளும்படி வங்கிகள் தமது அனைத்து கிளைகளுக்கும் அறிவுறுத்துதல் அவசியம். அவ்வாறு அளிக்கப்படும் நாணயங்களில் சிறு நாணயங்களை எடையிட்டு பெற்றுக் கொள்ளலாம். இருப்பினும் நாணயங்களை 100ன் மடங்காக எண்ணி அவற்றை தனித்தனி பைகளிலிட்டு அளிப்பது வாடிக்கையாளுக்கும், வங்கிக்காசாளருக்கும் வேலையை எளிதாக்கும். அத்தகு பைகளை வங்கி முகப்புகளில் வாடிக்கையாளரின் பயன்பாட்டிற்கு அளிக்கலாம். பொதுமக்களுக்கு தகவல் அறிவிக்கும்பொருட்டு இவ்விஷயம் தொடர்பாக, ஒரு அறிவிப்பினை வங்கிக் கட்டிடத்தின் உள்ளேயும் வெளியேயும் அனைவரும் அறியும்பொருட்டு வைக்கலாம். அலுமினிய நாணயங்கள் 5,10,20 பைசாக்கள் எவர்சில்வர் 10 பைசா நாணயங்கள், அலுமினிய-வெண்கலக் கலப்பிலான 10 பைசா நாணயங்கள், செம்பு நிக்கல் கலப்பிலான 25, 50 பைசா மற்றும் 1 ரூபாய் நாணயங்கள் – புழக்கத்திலிருந்து விலக்கப்பட்டு நாணயக்கிடங்களுக்கு அனுப்பப்படுவதால், வாடிக்கையாளர்கள் நாணயங்களை முகப்புகளில் அளிக்கும்போது இத்தகைய நாணயங்களை உலோக ரக வாரியாக, இலக்கம்வாரியாக பிரித்து 100 எண்ணிக்கை மடங்கில் தனித்தனிப்பைகளில் அளிக்கும்படி அவர்களை வேண்டிக் (வற்புறுத்தல் அல்ல) கொள்ளலாம். தற்சமயம் புழக்கத்திலுள்ள 25, 50 பைசா நாணயங்கள்

எவர்சில்வர் 1 ரூபாய் செம்பு நிக்கல் கலப்பிலான 2ரூபாய், 5 ரூபாய் நாணயங்கள் விஷயத்திலும் மேற்கண்ட முறையையே வாடிக்கையாளரிடமிருந்து முகப்புகளில் நாணயங்கள் பெறும்போது கடைப்பிடிக்கலாம்.

(c) நாணயங்களைப் பாதுகாத்து வைக்கும் பொறுப்பிலுள்ள பிரச்சனையைக் கருத்தில் கொண்டு அதை தவிர்க்கும் விதமாக 5,10,20 பைசாக்கள் அலுமினிய நாணயங்கள், 10 பைசா எவர்சில்வர் நாணயங்கள், 10 பைசா அலுமினிய-வெண்கலக் கலப்பிலான நாணயங்கள், 25, 50 பைசா மற்றும் 1 ரூபாய் செம்பு நிக்கல் கலப்பிலான நாணயங்கள் ஆகிய அனைத்தையும் வங்கிக்கிளைகள் தத்தம் பணக்கருவூலங்கள் மற்றும் சிறுநாணயக்கிடங்குகள் அல்லது மற்ற வங்கியின் இணைப்புடைய கருவூலங்கள் சிறுநாணயக் கிடங்குகள் மூலமாக நடைமுறையிலுள்ள செயல்முறையின்படி ஹைதராபாத், கொல்கத்தா மற்றும் மும்பையிலுள்ள இந்திய அரசின் நாணயக்கூடங்களுக்கு முன்கூட்டியே தகவல் அறிவித்துப் பின்னர் அவற்றை அனுப்பி வைக்கலாம். எவர்சில்வர் கலப்பிலான, 25, 50 பைசா மற்றும் 1 ரூபாய் நாணயங்கள் செம்பு நிக்கல் கலப்பிலான 2 ரூபாய், 5 ரூபாய் நாணயங்கள் ஆகியவை மட்டும் மீண்டும் பொதுமக்களிடையே புழக்கத்திற்கு விடப்படலாம். இத்தகைய நாணயங்களின் கையிருப்பு, பணக்கருவூலம் அல்லது சிறுநாணயக்கூடத்தின் கொள்ளளவையும் தாண்டும் நிலையேற்பட்டால் அத்தகைய நாணயங்களை அனுப்பி வைக்கும் பொருட்டு அந்த வட்டத்திற்குரிய ரிசர்வ் வங்கியின் பண வழங்கு துறையை அணுகிடலாம்.

(d) பிராந்திய மேலாளர்/மண்டல மேலாளர் தத்தம் வங்கிகளின் கிளைகளில் திடீர் ஆய்வுகள் மேற்கொண்டு மேற்கண்ட விவரங்கள் எவ்வாறு பின்பற்றப்படுகின்றன என்பது குறித்த தமது அறிக்கையைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். தலைமை அலுவலகம் அத்தகைய அறிக்கைகளை அவ்வப்போது பரிசிலனை செய்து தேவைப்படும் நேரங்களில் எல்லாம் உரிய தீர்வு நடவடிக்கைகளை எடுக்கும்.

(e) இந்த விஷயத்தில் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் பின்பற்றப்படாவிடில் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களை மீறியதாக அது கருதப்படும்.

இணைப்பு

## தொகுப்பு சுற்றறிக்கையில் அடங்கியுள்ள சுற்றறிக்கைகள் ஆன பட்டியல்

| | | |
|---|---|---|
| G-67/08.07.18/96-97 | 18.2.1997 | RBI (Note Refund) Rules, 1975, Delegation of full powers to private sector banks maintaining currency chests |
| G-52/08.07.18/96-97 | 11.1.1997 | RBI (NR) Rules Scheme of delegation of powers to PSBs for exchange of defective notes – Disposal of notes bearing PAY/PAID stamp. |
| G-24/08.01.01/96-97 | 03.12.1996 | Acceptance of Exchange of Cut Notes – Liberalisation. |
| G-64/08.07.18/95-96 | 18.5.1996 | RBI(NR) Rules – Delegation of full powers to branches PSBs and publicity for exchange of defective notes. |
| G-71/08.07.18/92-93 | 22.6.1993 | RBI(NR) Rules – Scheme of delegation of full powers for exchange of defective notes to the branches of PSBs – Publicity. |
| G-83/CL-1(PSB)-91/92 | 06.5.1992 | RBI(NR) Rules – Delegation of powers to chest branches of PSBs. |
| G-74/CL-(PSB)(Gen)-90/91 | 05.9.1991 | RBI(NR) Rules – Delegation of full powers there under to PSBs. |
| 5.5/CL-1(PSB)-90/91 | 25.9.1990 | RBI(NR) Rules – Scheme of delegation of full powers to PSBs. |
| 8/CL-1(PSB)-90/91 | 17.8.1990 | RBI(NR) Rules – Scheme of delegation of full powers to PSBs. |
| G-123/CL-1(PSB)(Gen)-89/90 | 07.5.1990 | RBI(NR) Rules – Scheme of delegation of full powers to PSBs (Amendment). |
| G-108/CL-1(PSB)(Gen)-89/90 | 03.4.1990 | RBI(NR) Rules 1989 – Bank notes of Rs.500/- denomination – Exchange of defective notes at branches of PSBs. |
| G-8/CL-1(PSB)-89/90 | 12.7.1989 | RBI(NR) Rules – Defective notes branded with 'To Claims' stamp of RBI Issue Offices. |
| G.84/CL.1(PSB)-88/89 | 17.3.1989 | RBI(NR) Rules – Delegation of full note exchange powers to PSBs. |
| G.66/CL.1(PSB)-88/89 | 09.02.1989 | RBI(NR) Rules – Delegation of powers to PSBs – Training. |
| S.12/CL-1(PSB)-88/89 | 30.9.1988 | RBI(NR) Rules – Deliberately mutilated notes – Adjudication. |
| G.134/CL-1(PSB)-87/89 | 25.5.1988 | Implementation of the Scheme of delegation of full powers under RBI(NR) Rules. |
| 192/CL-1-(PSB)-86/87 | 02.6.1987 | RBI(NR) Rules – Scheme of delegation of full powers to PSBs. |
| 189/CL.2/86/87 | 02.6.1987 | Defacing currency notes by writing on them or inscribing messages, slogans etc. thereon. |
| 185/CL-1(PSB)-86/87 | 20.5.1987 | RBI(NR) Rules – Affixing of 'PAY' and 'REJECT' stamps on defective notes. |
| 173/CL.1/84/85 | 02.4.1985 | Delegation of full powers to PSBs for exchange of defective notes/procedures of the same. |
| Cy.No.1064/CL.1/76/77 | 09.8.1976 | Facilities to the public for exchange of soiled notes and slightly mutilated notes. |
| Cy.No.386/08.07.13/2000-2001 | 16.11.2000 | Reserve Bank of India (Note Refund) Rules, |

| | | |
|---|---|---|
| | | 1975 – Delegation of full note exchange powers to currency chest branches of Public/ Private Sector Banks. |
| G-11/08.07.18/2001-02 | 02.11.2001 | Reserve Bank of India (Note Refund) Rules, 1975 – Delegation of note exchange powers to currency chest branches of Public/Private Sector Banks. |
| DCM(RMMT)No.404/ 11.37.01/2003-04 | 09.10.2003 | Acceptance of coins and availability of notes. |
| **DCM(NE)No.310/ 08.07.18/2003-04** | 19.01.2004 | Providing facilities to public for exchange of notes, coins, etc. |
| **DCM(RMMT)No.1181/ 11.37.01/2003-04** | 05.04.2004 | Acceptance of coins. |
| **RBI/2006-07/349/DCM (NE)No.7488/08.07.18/ 2006-07** | 25.04.2007 | Acceptance of Small Denomination Notes and Coins. |